MSA 147

அனுபவ வைத்தியம்

சுவடி எண் : 296

(இரண்டாம் படி)

Typed

1. சுவடியின் பெயர்	:	அநுபவ வைத்தியம்
2. சுவடி எண்	:	296
3. படி எடுத்தவர்	:	நா.பாக்கியசுந்தரி
4. மொத்த பக்கங்கள்	:	59ஓலைகள்(55+4)
5. தட்டச்சு செய்தவர்	:	வெ.சுப்புலட்சுமி
6. தட்டச்சு பக்கங்கள்	:	62
7. தட்டச்சு எடுத்த நாள்	:	8.8.03 முற்பகல்
8. தட்டச்சு முடித்த நாள்	:	14.8.03 பிற்பகல்

பொருளடக்கம்

..2

21. மடலிங் சுத்தி

22. இருசு சுத்தி

23. அஞ்சனக் கல் சுத்தி

24. லோக சுத்தி

25. தாம்பரம் சுத்தி

26. நாக சுத்தி

27. காந்தத் சுத்தி

28. காரீயச் சுத்தி

29. பொன் நிமிளைச் சுத்தி

30. நேர்வாளம் சுத்தி

31. கொட்டை சுத்தி

32. சிரதை சுத்தி

33. லோக மாரணம்

34. லோக பற்பம்

35. லோக செந்தூரம்

36. காந்த செந்தூரம்

37. காரீய செந்தூரம்

38. வெள்ளீயம்

39. தாம்புரம் சுத்தி

40. ரசிதம்

41. தங்க செந்தூரம்

42. குளிகை

43. கடுக்காய் லேகியம்

44. சுக்கு லேகியம்

45. நாவிக்காய் லேகியம்

46. மிளகு லேகியம்

47. திப்பிலி லேகியம்

48. ஜாதிகாய லேகியம்

49. கடுகு லேகியம்

50. வெந்தைய லேகியம்

51. ஓம லேகியம்

52. பெருங்காய லேகியம்

53. பத்தியம்

54. பித்தம் நாற்பதுக்கும் நயன ரோகம் முப்பதுக்கும் கேசரி தயிலம்

55. அயச்செம்பு செந்தூரம்

56. அமுர்தாதி தயிலம்

57. பூவாதீதி எண்ணெய்

58. மேகத்தெண்ணெய்

59. கைமாறு வெற்றிலை எண்ணெய்

60. மேகத்தெண்ணெய்

61. மதனகாமேஸ்வரம்

62. கற்கவகை

63. . . . . . எண்ணெய்

...

அமபூவ_வைத்தியம் :-(ஓலை ஏடு. 296)_

(பாடல் 1 முதல் 21 முடிய தொடர்பின்றி அமைந்துள்ளது).
விடுபட்டுள்ளது.) தட்டச்சு செய்யப்படவில்லை).

..

22. வேன்னால் சரக்குச் சுத்தி

வேறொருவரு முரைக்க யில்லைக்

கண்ணால் சரக்குக் கெல்லாங்

கல்மசந் தீரா விட்டால்

பண்ணாள் மருந்து சந்தம்

பருகிடப் பிணி பாரிக்கும்

நண்ணாள் செந்நா ரங்கள் யிடை

பகரும் நன்டா காதே

வேறு யாரும் தெளிவாக உரைக்காத சரக்கு சாத்திர செய்முறைகளை நான் கூறுவேன். மருந்து பொருட்களில் உள்ள மாசு நீங்காவிட்டால், அச்சரக்குகளைக் கொண்டு செய்யப்படும் மருந்து-களைப் பயன்படுத்துவோர்க்கு நோய் நீங்குதற்குப் பதிலாக நோய் பார்க்கும். எனவே சரக்கு சுத்திசெய்முறைகளைச் சொல்வேன்.

23. லிங்கு சுத்தி:

கண்டாக சரக்கு சுத்தி

நவிலுறோம் லிங்கத்துக்கு

பன்டாகப் பழச்சா றோடுப்

பருகிய பாலுங் கட்டி

குண்டாக மேனிச் சாறு

முன்மையுஞ் சமனாய்ச் சேர்த்துச்

குண்டாக லிங்கத் துக்கு

சுறுகிடச் சுத்தி யாமே

எலுமிச்சம்பழச் சாறும், பசும்பாலும், குப்பைமேனிச் சாறும் சம அளவாக எடுத்து லிங்கத்திற்குச் சுருக்குக் கொடுக்கவும். மேற்சொன்ன மூன்றையும் பாத்திரத்தில் ஏற்றி அடுப்பேற்றி அதில் லிங்கங் கட்டியைப் போட்டு கொதிக்க வைத்து இறக்கிக் கொள்ள லிங்கம் சுத்தி யாகும்.

24. வீர_சுத்தி

ஆச்சிது வீரத் துக்கு
யடவதுச் சொல்லக் கேளு
பாச்சிது யிளநீர் விட்டுப்
பண்பாக லவித்துப் போட்டு
வூச்சிது கடிகை மூன்று
வூற்பனங் கண்டு கொள்ளு
காச்சிது விளநீ ருள்ளே
கழஞ்சி கற்பூரஞ் சேரே

வீரத்திற்கான சுத்தியைச் சொல்வேன். இளநீரில் வீரத்தை இட்டு அவித்தெடுக்கவும். அவ்வாறு அவிக்கும்போது 72 நிமிடங்கள் வரை அவித்து எடுத்துக் கொள்ளவும். இவ்வாறு இளநீரில் வேக வைக்கும்போது கற்பூரமும் சேர்த்து வேகவைத் தெடுத்துக் கொள்ள சுத்தியாகும்.

25. பூர_சுத்தி

சேர்த்திடு பூரத் துக்கு
வெற்றிலை மிளகு கூட்டி
காத்திடுங் கசாயஞ் செய்து
கசாயத்தில் மூன்று நாளிவை
வாத்திடுங் கிரியாங் கட்டி
வைத்திடச் சுத்தி யாச்சு
யாத்திடு வெள்ளை சுத்தி
யப்பனே யறையக் கேளே

பூர சுத்திக்கு வெற்றிலையுடன் மிளகுஞ் சேர்த்து, முறைப்படி கசாயம் செய்து அக்கசாயத்தில் மூன்று நாள் ஊற வைக்கவும். பின்னர் கிரியாழ்க் கட்டி வைத்தெடுக்க பூரம் சுத்தியாகும். இனி வரும் பாடலில் வெள்ளையைப் பற்றிய சுத்திசொல்வேன்.

26. வெள்ளை சுத்தி:

அறையிறே ஒமுரிக் குள்ளே
மிளகது வரைத்துப் போட்டு
முறையிறேன் படிதா னொன்று
வற்றவே மூடிக் காய்ச்சி
வுறையிறேன் கிளியை வாங்கிக்
கழுவியே யுலர்த்தி வைப்பாய்
பறையிறேன் கௌரி சுத்தி
முறையது பகரக் கேளே

மிளகை அரைத்த படி அமுரிக்குள்ளே போட்டு மூடி எரித்துக் காய்ச்சவும். சுண்ணாம்பைக் கிளிகட்டி அமுரிக்குள் வைத்து எரித்த பின், கிளியை எடுத்து கழுவி உலர்த்தி எடுத்துக் கொள்ள சுத்தியாகும்.

27. கௌரி சுத்தி:

கேளது பன்றிப் பாலில்
கிளியது வாகக் காட்டி
வாளது கடிகை யொன்று
யவித்திட நல்ல சுத்தி
கூறது குதிரைப் பல்லின்
சுத்தியின் குணத்தை கேளு
நாளது கடிகை மூன்று
நாவினி லுமி நீராலே

கௌரியை சுத்தி செய்வதற்கு அதனைக்கிளியாகக் கட்டி பன்றிப்பாலில் 240 நிமிடம் அவித்தெடுக்க கௌரி சுத்தியாகும். குதிரைப் பல்லினைச் சுத்தி செய்வதற்கு அதை 3/4 மணி நேரம் உமிழ்நீரில் ஊற வைத்தெடுக்கவும்.

28. துதிஉரய்பவ் சுத்தி_

உமிநீரி லூறப் போட்டு

வுலத்திட சுத்தி யாச்சு

யாமினி சிலையின் சுத்தி

யிடவிளை யறிந்து கொள்ளுத்

தமனிய காடி நாளி

தனினிந் கிளியாய் போட்டு

வமனிய கடிகை மூன்டு

வவத்திட வளம தாமே

யாமினி_சிலை:

யாமினி சிலையின் சுத்தி செய்முறையை அறிந்து கொள்ள வேண்டும். 1.3லிட்டர் காடித் தண்ணீரில் கிளிகட்டி 75நிமிட நேரம் அவித்து எடுத்துக் கொண்டால் யாமினி சிலை சுத்தியாகும்.

29. பவளம்_புத்தி:

ஆமத பவளப் புத்து

வாலின்மோரா யிது லூனிக்குள்

தாமித கிளியாய் கட்டித்

தாக்கிருவ் கடிகை நாலு

வோமித வுலர்த்திப் போடு

வுத்தம நல்ல சுத்திக்

காமித வரி தாரத்தின்

சுத்தியைக் கருதிக் கேளே

பவளப்புற்றை 2.6லிட்டர் மோரில் கிளியாய்க் கட்டி தொங்கவிட்டு 100 நிமிட நேரம் ஊறவிட்டெடுத்து உலரப்போட பவளப்புற்று சுத்தியாகும்.

30. அரிதாரம்_சுத்தி:

கருதிய வமுரி நாளி

    கல்சுன்னங் கால்தா னாகும்

பருகிய மேனிச் சாறு

    பழச்சாறு படிகால் வீதம்

சுருதிய கடிகை யொன்றுக்

    கிளியின் சறுக்காய் காய்ச்சி

ஒருதிய சலத்தில் சுத்தி

    செய்திட்டு வுலர்த்தி டாயே

1.3லிட்டர் அமுரியில் கல்சுன்னம், கும்பைமேனிச்சாறு இவை 325மிலி வீதம் சேர்த்து 24 நிமிடங்கள் தொடர்ந்து காய்ச்சி (அரிதாரக் கட்டியைக் கிழியாய்க் கட்டித் தொங்கவிட்டு) நல்ல தண்ணீரில் எடுத்துக் கழுவி சுத்தம் செய்து கொள்ள அரிதாரம் சுத்தியாகும்.

31. சிலா சத்து:

உலர்த்திய சிலா சத்துக்கு

    ஊறல்தான் போக்க கேளு

கலத்திலே பழச்சாத் துள்ளே

    காய்ச்சியே வுலர்த்திப்பின்பு

நலத்திலே யெருக்கம் பாலில்

    வூறவை நாளி ரண்டுத்

தலத்திலே கழுவிப் போடு

    கல்நாரின் வரிசை கேளே

சிலாசத்திலுள்ள கழிவுகளைப் போக்குவதற்கு சுத்தி சொல்லப்படுகிறது. பழச்சாறு எனப்படும் எலுமிச்சம் பழச்-சாற்றில் சிலாசத்தைப் போட்டுக்காய்ச்சி உலர்த்தி பின்னர் எருக்கம்பாலில் ஊற வைத்து இரண்டு நாள் கழித்து எடுத்து கழுவி உலர்த்திக் கொள்ள சுத்தியாம்.

32. கல்நார் சுத்தி:-

வளமையாங் கழுதை நீரில்
　　வாட்டிடுங் கடிகை மூன்று
களமையாந் கிளியை வாங்கி
　　கழுகியே ரவியில் போடு
பளமையாந் கெருட பச்சை
　　பாங்கினை பகரக் கேளு
தளமையாய் பயிறைப் போல
　　தட்டியே கிளியாய் கட்டே

கல்நாரை கழுதை நீரில் 72 நிமிடங்கள் ஊற வைத்து (கிளிகட்டி) கிளியை நீக்கி ஊற வைத்துக் கழுவி வெயிலில் காய வைக்கவும். இப்போது கல்நார் சுத்தியாகும். கெருடப்பச்சை சுத்தி சொல்வேன். கெருடப் பச்சையைத் தகடுபோல் தட்டி கிளிகட்டிக் கொள்ளவும்.

33. கெருட பச்சை:

கட்டியே குமரிச் சாற்றில்
　　கடிகை முப்பதுவே காய்ச்சி
மூட்டியே கழுவிப் பின்பு
　　வுலர்த்தியே வைத்துக் கொண்டு
செட்டியார் சீனத் துக்கு
　　சுத்தியின் சிறப்பைக் கேளு
யாட்டியே யாவின் பாலில்
　　யூறவை யதிக கதி

குமரி எனும் கற்றாழைச் சாற்றில் கெருடப் பச்சையைப் போட்டு 12 மணி நேரம் காய்ச்சி எடுத்துப் பின் சுத்தமான நீரில் கழுவி எடுக்கச் சுத்தியாகும். சீனக் காரத்தை நன்றாக அரைத்துப் பசும்பாலில்ல கரைத்து ஊற வைத்தெடுக்க சீனக் காரம் சுத்தியாகும்.

34. பொரிகாரம் சுத்தி:

சுத்தியாய் பொரி காரத்தை
செய்திடச் சொல்லக் கேளு
பத்தியே கிளியாய் கட்டி
யெருமை சானாகு சாற்றில்
வத்தியாய் கொதிக்கும் போது
வளமைசேர் கிளியா யமுக்கிப்
பத்தியாய் கழுவி வைக்க
சுத்திலை பகரக் கேளே

பொரி காரத்தைக் கிளிகட்டி எருமைச் சாணாக்கிச் சாற்றில் விட்டு கொதிக்க வைத்துக் காய்ச்சி இறக்கி கிழிநீக்கித் தூய்மை செய் சுத்தியாம்.

35. சுத்தில் சுத்தி:

பகரவே யெருமை மோரில்
பன்பதா யூதப் போட்டுத்
தகரவே சுந்திருக்குச் சுத்தி
சாத்திரேன் சாரா யத்தில்
வுகரவே யூதப் போட்டு
வோடுநாளில் சுத்தி யாச்சு
முகர வெங்கா ரத்துக்கு
மூத்திர முண்டா னானே

சுத்திலை எருமை மோரில் ஊறப்போட்டு எடுத்துக் கழுவிக் கொள்ள சுத்தியாகும். சாராயத்தில் சுத்திருக்கத்தை ஒருநாள் ஊறப் போட்டு கழுவிக் கொள்ள சுத்தியாகும்.

36. சூந்திருக்கம் சுத்தி:-

மூன்றுநாள் நனைய வைத்து
முந்தியம் நல்ல சுத்தி
தாண்டவ மாடுங் கௌரி
சுத்தியின் சார்வு கேளு
யெண்டவா வெண்ணெய் விட்டு
யிரும்பினி லுருக்கிப் பாலில்
லாண்ட விரைந்து சாய்க்க
வதிகமாஞ் சுத்தி யாச்சே

வெண்காரத்தை மூத்திரத்தில் 3 நாள் ஊற விட்டு எடுக்க சுத்தியாகும். கௌரி சிந்தாமணியை வெண்ணெயில் போட்டு இரும்பைக் காய்ச்சி உருக்கி பாலில் சாய்க்க சுத்தியாகும்.

37. கெந்தக சுத்தி, ரச_சுத்தி:-

ஆச்சிது ரசத்தின் சுத்தி
யறையிறே னடைவாய் தானே
மாச்சிது புகையி னூறல்
மஞ்சளின் பொடியுஞ் செங்கல்
போர்சிது பொடியி னுப்பும்
போட்டரைத் துலர்த்திப் போடு
வாச்சிது மேனிச் சாறும்
பிரண்டையும் வளமாய் மத்தி

இரசத்தைப் புகையூறல், மஞ்சள்பொடி, செங்கல், பொட்டிலுப்பு, இவற்றைச் சேர்த்து அரைத்து உலர்த்தி எடுத்து பின் குப்பைமேனிச் சாற்றிலும், பிரண்டையாலும் மத்தித்துக் கொள்ளவும்.

38. மத்தையின் சாறுந் தேனு
மருவிய யிஞ்சிச் சாறும்
கொத்தி னாவரையின் பட்டை
குறுகிய கசாயந் தன்னில்
சித்திர மூலத் சாறு
சேர்த்தரை திரிய வாதி
வத்திய கசாயத் தன்னில்
மத்திக்கும் வளமை கேளே

ஊமத்தஞ்சாறு, தேன், இஞ்சிச்சாறு, ஆவாரைப்பட்டையில் காய்ச்சிய குடிநீர், சித்திரமூலச்சாறு இவற்றைச் சேர்த்து அரைத்து பின் திரிபலாதி கசாயத்தில் அரைத்துக் கொள்ளவும். இப்போது இரசம் சுத்தியாகும்.

39. யமுறி சுத்தி:_

கேளுந் யமுரி சுத்தி
கிளத்திடு மத்தி யித்தி
நாளினில் நாகப் பட்டை
நண்டதாய் கியாமஞ் செய்து
வாளுந் வெவ்வே றாக
மத்திக்க வணித மாகு
மாளுந் பலமே சூத
மதுவும் வெவ்வேற தாமே

அத்தி, இத்தி நாகப்பட்டை இவற்றை சேர்த்து குடிநீர் செய்கின்ற முறைப்படி குடிநீர் செய்து கொண்டு இரசத்தைத் தனித் தனியே மத்தித்துக் கொள்ள இரசஞ் சுத்தியாகும்.

40.முடிதாரச் சுத்தி:

ஆமினி வகை வகைக்கு
நாளிகை யளவ தாகத்
தாமினி யோர்வொன் றாக
தலத்தினில் கழுவிப் போட்டு
வோமினி வால சூதம்
வுறுதிகா விந்தச் சுத்தி
நாமினி முடி தாரத்தின்
சுத்தியை நவிலக் கேளே

மேலும் ஒவ்வொன்றிலும் 24 நிமிடங்கள் வீதம் தனித் தனியே கழுவி எடுத்துக் கொள்ளவும். இப்போது சூதம் எனும் இரசம் சுத்தியாயிருக்கும். இனி முடிதாரத்தின் சுத்தி சொல்லப்படுகிறது.

41.சிங்கி சுத்தி:

கேளுநீ பனையின் கள்ளு
கெடியதாய் படி நாலுக்குள்
வாளுநீ கிரியாய்க் கட்டி
வைத்தெரி வளமை யாக
மானிது கழுவி வைத்து
வளமையாய் நவில சுத்தி
யானிது தார சிங்கி
யதனுட சுத்தி கேளே

5.200 மி.லிட்டர் பனங்கள்ளில் முடி தாரத்தை கிரியாக் கட்டி தொங்கவிட்டு நீண்ட நேரம் எரித்து பின் எடுத்துக் கழுவி நன்மை செய்திட முடிதாரம் சுத்தியாகும். இனி தாரசிங்கியின் சுத்தி சொல்வேன்.

42. தொட்டி மடல் சுத்தி

அதிலிட சுத்தி வெள்ளா

யாட்டுநீர் தன்னில் காய்ச்ச

வதனமாந் தொட்டி நவின

வரிசையை வளமாய் கேளு

சுதனமா முலைப் பாலோடு

சுத்தி வெள்ளாட்டுப் பாலும்

பதனமா மொவ்வொன் முக்கு

நாளிகை பத்துப் பத்தே

தொட்டி மடல் சுத்தி சொல்லப்படுகிறது. தொட்டி மடலை ஆட்டு மூத்திரத்தில் காய்ச்சி எடுக்கச் சுத்தியாகும். தாய்ப்பாலிலோ வெள்ளாட்டுப் பாலிலோ முறையே 4 மணிநேரம் தனித் தனியே ஊற வைத்துக் கழுவியெடுக்கச் சுத்தியாகும்.

43. தொட்டி பூசாஷத்தி

பத்துப் பத்தாக வூறப்

பார்த்திட சுத்தி யாச்சு

முத்து முத்தான தொட்டிப்

பாசான முறையைக் கேளு

சத்து சத்தாக வெட்டித்

தானொரு கிழியாய் கட்டி

கொத்துக் கொத்தாக நெல்லில்

வித்தினிக் குறியைப் பாரே

மேற்சொன்ன தொட்டிமடலை இவ்வாறு 4 மணி நேரம் தனித்தனியே ஊற வைத்தெடுக்கவும். தொட்டிப் பாஷாணத்தின் சுத்தி முறையைச் சொல்கிறார். அதனைத் துண்டுதுண்டாக வெட்டி கிழியாகக் கட்டி நெல்லினுள்ளே பொதிந்து வைக்கவும்.

44.பாடல் இல்லை. விடுபட்டுள்ளது.(தட்டச்சு செய்யப்படவில்லை)

45. மூடலின் சுத்தி

குறியென்ன கழுவிப் போட்டு

கறிய மடலின் சுத்தி

நறுவெண்ணெ யதனிற் போட்டு

நாளொன்றுக் கறி வாங்கித்

தெளிபடா தயிருக் குள்ளே

செலுத்திடு நாளொன் றுத்தாள்

மதிவென்ன குமரிச் சாற்றில்

மஞ்சளின் சாத்தி லோர் நாள்

அரிதார மடலின் சுத்தி சொல்லப்படுகிறது. இப்பாடலில். அரிதாரத்தை வெண்ணெயில் போட்டு ஒரு நாள் பொரித்து,குமரிச் சாற்றில் ஒரு நாளும்,மஞ்சள் சாற்றில் ஒரு நாளும் ஊறப்போடவும்.

46.வோரோரு நாளா வூறிக்

கழுவியே யுலர்த்தி போடும்

பாரொரு நல்ல சுத்தி

பச்சையின் தருசைக் கேளு

வாரோரு பசுவின் நீரால்

வைத்தெரி படி நாலுக்குள்

சீருடன் கழுவி வெய்யில்

சிறப்புட னுலர வைப்பே

இவ்வாறு ஊறப்போட்டு எடுத்துத் தூய்மை செய்து கொள்ள அரிதார மடல் சுத்தியாகும். இனி பச்சைத்துருசின் சுத்தியைச் சொல்வேன். 5.2லிட்டர் பசு கோமியத்தில் துருசம் போட்டு எரித்தெடுக்கவும். பின்னர் எடுத்துத் தூய்மையான நீரில் கழுவி வெயிலில் காய வைத்தெடுக்க சுத்தியாகும்.

47. அஞ்சனக்கல் சுத்தி (முஞ்சனக்கல்):

வைத்திடச் சுத்தி யாச்சு

மருவிய சாத்திர வேதி

கைத்திடும் நார்த்தங்காய்

சாத்திரி லூறக் கண்டு

பத்திடக் கழுவிப் போட்டுப்

பார்த்திட நல்ல சுத்தி

நத்திடு மஞ்சனக்கல்

சுத்தியை நவிலக் கேளே

சாத்திர பேதி சாற்றிலும், நாரத்தங்காய் சாற்றிலும் ஊறவிட்டு நன்றாகக் கழுவி எடுத்தால் நல்ல சுத்தியாகும். இனி இ அஞ்சனக்கல் சுத்தியைச் சொல்வோம்.

48. லோக சுத்தி:

கேளப்பா புளியி லாரைக்

சாற்றினி லூறப் போட்டு

நாளப்பா சென்ற பின்பு

நல்லதோர் சுத்தி யாச்சு

வாளப்பா லோக சுத்தி

மருவியே கேளு கேளு

தாளப்பா நல்லெண் ணெய்க்குள்

தாலொரு நாள தாமே

இரும்பு சுத்தி உரைக்கப்படுகின்றது. இதை புளியாரைச் சாற்றில் ஊறப்போட்டு ஒரு நாள் கழிந்த பின் எடுத்தால் அது நல்ல சுத்தியாகும். அதன் பின்னர் நல்லெண்ணெயில் ஒரு நாள் ஊறப்போட்டு எடுக்க சுத்தியாகும்.

49. தாம்புரம் சுத்தி:

நாளதாம் பழச்சா றுக்குள்
நாழிகை யறுப தாகும்
வேளதாய் கழுவி வெய்யில்
முகத்தினி லுண்மை யாகும்
கொளதாந் தாம்பூர சுத்தி
கழுவோ மின்னுங் கேளு
வேளதா மமுரி யொண்டு
விளம்பி பழச்சாற் றிரண்டே

தாமிரத்தை எலுமிச்சம் பழச் சாற்றில் 60மணி நேரம் ஊறவிட்டு நன்றாகக் கழுவி வெயிலில் காய வைத்து எடுக்க சுத்தி-யாகும். அமுரியும் பழச்சாறும் கலந்து நன்றாக ஊறவிட்டு எடுக்க தாமிரம் சுத்தியாகும்.

50. நாக சுத்தி:

சாறுடன் சாரங் கட்டி
தாளகந் தானுங் கட்டி
வீறுடன் கலக்கிக் கொண்டு
வெய்யில் பத்து நாளிவை
நீருடன் கழுவிப் போட்டு
நிசமதாய் சுத்தி யாச்சு
யாறுட நாக சுத்தி
யறையிறே னறிந்து கொள்ளே

அமுரி ஒரு பங்கு, பழச்சாறு இரண்டு பங்கு அதனுடன் அதிசாரமும், தாளகமும் அரைத்துச் சேர்த்துக் கட்டிக் கலக்கி தாமிரத்தை அதில் போட்டு வெயிலில் பத்துநாள் வைக்கவும். பின்னர் எடுத்து நீரில் கழுவி எடுக்க தாமிரம் சுத்தியாகும்.

51. கொள்வது கல்லுச் சுண்ணந்
        கட்டிடு மமுரிக் குள்ளே
    வுள்வது பழச்சாந் தாடே
        வூந்திடு முறவாய் சேர்த்து
    யிளவது நாகந் தன்னை
        யாட்டு நெய் போட்டு நீக்கி
    பளவது பத்துச் சாமக்கச்
        சுத்தியாம் பாரு பாரே

இருந்த பாடலில் நாகசுத்தி சொல்லப்படுகிறது. நல்சுண்ணத்தை அமுரிக்குள் போட்டு பழச்சாறும் சேர்த்து நன்றாகக் கலக்கி நாகத்தை அதனுள்ளே போட்டு நெய்யும் சேர்த்து 30மணிநேரம் கழித்து எடுத்துப் பார்க்க சுத்தியாகும்.

52. காந்தச் சுத்தி

    பாருநீ காந்த சுத்தி
        பகருவேன் காணச் சாத்தில்
    சீருடன் காய்ச்சித் தோய்க்க
        சிறப்புட வேழு காய்ச்சி
    வாருன் கழுவி வைக்க
        வளமையாஞ் சுத்தி யாச்சு
    பாரினில் காரீயத்தை
        சுத்தியை யறியக் கேளே

காந்தத்தின் சுத்தி காணச் சாற்றில் செய்து கொள்ளலாம். காந்தத்தைக் காணச் சாற்றில் போட்டு நெய்யில் காய்ச்சி தோய்க்க வேண்டும். இவ்வாறு ஏழு முறை காய்ச்சித் தோய்க்க வேண்டும். பின்னர் எடுத்துக் கழுவி வைத்துக் கொள்ள சுத்தியாகும். இனி காரீயத்தின் சுத்தி பற்றிக் கூறுவேன்.

53. காரீயச் சுத்தி:

இ அறிவது வெள்ளாட் டுநீர்

யதினோடு பிரண்டை யின்வேர்

செறிவுட னரைத்துப் போட்டுச்

சேருகநல் வெண்ணெய் குத்தி

குறியுட னுருக்கிச் சாய்க்க

குணமுட னிருஞ் சாகு

மறிவது மில்லாச் சுத்தி

வாய்ந்தது புவியுள் ளோர்க்கே

வெள்ளாட்டு நீரில் பிரண்டையை அரைத்துக் கலக்கி அதில் இவ்வெண்ணெயில் காரீயத்தை உருக்கிச் சாய்க்க காரீயமானது குணமுடன் சுத்தியாகியிருக்கும் என்பது.

54. பொன்_நிமிளை சுத்தி:

உள்ள பொன்நிமிளைச் சுத்தி

யுரைக்குறே னுணர்வாய் கேளு

கள்ளமாறு காடிக் குள்ளே

காய்ச்சிடு மூன்று நாள்தான்

வள்ளவே நல்ல சுத்தி

வளமதா மப்பி ரகத்தை

யுள்ளது கொண்ணோறு காடி

நீரினி லூறப் போட்டே

பொன்னிமிளையின் சுத்திமுறையைச் சொல்வேன். ஆய்ந்தறிந்து உணர்ந்து கொள்க. காடிக்குள்ளே பொன்னிமிளையைப் போட்டு மூன்று நாள் வரை காய்ச்சிக் கொள்ளவும். பொன்னிமிளை சுத்தியாகும். அப்பிரகத்தைக் காடியில் ஊறப் போட வேண்டும்.

55.நேர்வாளம் சுத்தி:

போட்டது பத்து நாளிலைப்
புகழுள்ள சுத்தி யாச்சு
யட்டது கல்ம தத்தை
யமுரியில் கழுவிப் போடு
நீட்டது நல்ல சுத்தி
நேர்வாளஞ் சுத்தி கேளு
நாட்டது பேதிச் சாளாம்
காடியில் கரைக்க நன்டே

இவ்வாறு பத்துநாள் வரை ஊறவிட்டு எடுத்தால் அபிரேகம் சுத்தியாகும். கல்மதத்தை எடுத்து கமுரியில் கழுவிக் கொள்ளவும். இதுவே கல்மதத்திற்குச் சுத்தியாகும்.

56.நண்டது கிளிஞர்ச் கட்டி
யெரித்திட நன்டாய் கேளு
வுண்டது வுலர்த்திக் கோட்டை
உடைந்து உள்நஞ்சு போக்கி
செண்டது காடி மோரும்
பழச்சாருஞ் சேர்த்துக் கொண்டுப்
பண்டது பருப்பைப் போட்டு
பத்துநாள் தனில் வாங்கே

நேர்வாளத்தின் மற்றுமொரு சுத்திமுறை சொல்லப்படுகின்றது. நண்டை கிளிகட்டி எரித்து உலர்த்தி ஓட்டை உடைத்து உள்நஞ்சு போக்கி காடி மோரும், பழச்சாறுஞ் சேர்த்து நேர்வாளப் பருப்பை அதனில் போட்டு பத்து நாள் ஊற வைக்கவும்.

57. தொட்டை சுத்தி:-

வாங்கியே யுலர்த்தி வைக்க

வளமையாஞ் சுத்தி யாச்சு

வொன்..ங் கொட்டைச் சுத்தி

ஓதகத்தி லூ றப் போட்டு

வாங்கிணா ளொன்று கொண்டால்

வுலர்த்தியே வைத்தி டாயே

பாங்குடன் சிவதை சுத்தி

பாலினி லவித்து லர்த்தே

கொட்டையின் சுத்தி இங்கே சொல்லப்படுகிறது. இதனை மழைநீர் அல்லது நீரில் ஊறப்போட்டு ஒரு நாள் கழிந்து எடுத்து உலர்த்தி எடுக்கவும். இதன் பின்னர் சிவதை சுத்தி செய்வதற்கு அதனைப் பாலில் அவித்து உலர்த்தி எடுத்துக் கொள்ளவும்.

58. திரவக_சுத்தி

பாயினி லமுக்குராவேர்

பண்பதாய் சுத்தி யாகும்

மூலி யான தெல்லாம்

முறையினிற் சுத்தி யாகும்

மாவி லிங்கம் பாசாணந்

களபத்து நாலஞ் சுத்தி

மெலவே சொல்லிப் போட்டேன்

மின்னமுஞ் சொல்லு வோமே

அமுக்கிரா வேரும் முன்னர் சொன்னதுபோல் பாலில் அவித்தெடுக்க சுத்தியாகும். மூலிகை எல்லாம் முறைப்படி சுத்தி செய்து கொள்ள வேண்டும் என்பது. மாவிலங்கம், பாஷாணம் போன்றவற்றின் சுத்திமுறைகள் எல்லாம் சொன்னேன். இன்னும் மீதமுள்ளவற்றின் சுத்திமுறைகள் இனிச் சொல்வேன்.

59. சொல்லுவோ மின்னங் கேளு

சூக்ஷமா யெக மாக

வல்லதோர் சரக்குச் சுத்தி

விபரத்தை விரித்துக் கேளு

நல்லதோர் மேனிச் சாறும்

நவிண்ட தக்காளிச் சாறு

வல்லதோர் கையாஞ் சாறு

மத்தையின் சாறு தானே

சுத்தி முறைகள் பற்றி இன்னும் சூக்ஷமாகச் சொல்வேன். பயன்படுத்தக்கூடிய மருந்து சரக்குகளின் சுத்திமுறையை இனி விரித்துச் சொல்வேன். குப்பைமேனிச்சாறு, தக்காளிச்சாறு, கையாந்தகரைச்சாறு, ஊமத்தையின் சாறு போன்றவற்றைச் சேகரிக்கவும்.

60. சாறுதான் பழச்சா றோடு

தன்னுட வமரி கூட

வாறுதான் காடி கூட்டி

வைத்துநீ மருந்து கேளு

வீறுதா னுப்புச் சுண்ணம்

வெடியுப்புச் சாரஞ் சீனம்

கறுதான் பல மொன்றாக

கட்டிநீ வைத்தி டாயே

பழச்சாறு எனும் எலுமிச்சம்பழச்சாறு, அமுரி, காடி இவற்றைச் சேர்த்து உப்புச்சுண்ணம், வெடியுப்புச் சுண்ணம், சீனக்காரம் இவை வகைக்கு 35கி வீதமெடுத்து சேர்த்து வைக்கவும்.

..20

61. கட்டிநீ வைத்துக் கொண்டு

சரக்கது பத்து நாளும்

நாட்டிய கிளியாய் கட்டி

நலமொரு மண்ட லம்வை

யாட்டின சுத்தி யாச்சு

சரக்கது பத்து நாளு

நாட்டினில் சுத்தி செய்யா

வைத்தியம் நன்றாகாதே

மேற்சொன்னவற்றை எல்லாம் கட்டி சரக்குகளைக் கிளிகட்டிக் கொண்டு தொங்கவிட்டு 40 நாட்கள் ஊறவிடவும். ஊறியபின் எடுத்துத் அம்மை செய்து கொள்ள சுத்தியாகும். இவ்வாறு பத்துநாள் ஊறவிட்டு சுத்திசெய்து கொள்ளாமல் அச்சரக்குகளைக் கொண்டு மருந்து செய்தால் மருந்து தன் வேலையைச் செய்யாது.

62. லோக_மாரணம்.

நண்டாகா வட்ட லோக

மாரணம் நவிலக் கேளும்

பண்டாக வட்ட லோகத்துக்கும்

பாச்சிடு கார சாரம்

வோண்டாக வீரம் பூரம்

வெள்ளையும் வெடியுப் போடு

மண்டாகச் சமனாய் சேர்த்து

வடித்தரை கெந்தி சூதம்

வட்ட லோக மாரணம் சொல்வேன். கேட்டுக் கொள்வாயாக. வட்ட லோகத்தில் கார சாரத்தைப் பாச்சிடவும். வீரம், பூரம், வெள்ளை வெடியுப்பு இவற்றைச் சமனாய் சேர்த்து, அதில் பாதி கெந்தி சூதம்

65. பாருநீ லோக பற்பம்

படிபடி வெவ்வே றாக

சீருடன் செய்து கொண்டு

திடமுடன் செய்து கொண்டு

செந்தூ ரங்கள் யாரினிசெய்யும் போது

யடவினைக் கட்டி யாட்டும்

பாருநீ பற்ப மென்ட

வகைக்கெல்லா மதுவே யாச்சே

இவ்வாறு உலோக பற்பம் செய்கின்ற போது படிப்படியாக வெவ்வேறு முறைகளில் செய்து கொண்டு முறைப்படுத்தலாம். செந்தூரங்கள் செய்கின்ற போது அடவினையும் கட்டி ஆட்டி பற்பமென்ற வகைக்கெல்லாம் இதனையே மருந்தாக்கிக் கொள்ளலாம்.

66. பாச்சுவாய் குளிகைக் கெல்லாம்

பரியுள்ளே லோக பற்ப

மாச்சியா முன்னூ லெல்லா

மறைந்திடும் பற்பங் கட்டி

சாச்சியே சொன்ன தெல்லாஞ்

சகலத்துந் திறவே கட்டி

வாச்சிது வயித்தி யோற்கு

வளமையா மிந்த நூலே

குளிகைகள் செய்கின்றபோது இந்த உலோக பற்பங்களையும் சேர்த்து, முன்னூல்களில் மறைத்துச் சொல்லப்பட்டு, இந்நூலில் என்னால் தெளிவாகச் சொல்லப்பட்ட இவ்வகைப் பற்பங்களைக் கட்டி சகல மருந்துகளிலும் இவற்றைக் கட்டி மருந்தை வளமையாக்கிக் கொள்ளலாம்.

67. நூ லின் லாருஞ் சொல்வார்

வுண்மையா மிந்தப் போக்கு

கால்தலை யறிய மாட்டார்

காசினி வயித்தி யோர்கள்

பாலினில் வெண்ணெய் வெண்ணெய்

பால்பாடிவேன் பல நூ லெல்லாம்

நால்வகை நூ லும் பார்த்தால்

நல்லதோர் விபர மாமே

நூ லின் இந்தப் போக்குகளை இத்தனை தெளிவாக யாரும் வெளியே சொல்லமாட்டார்கள். காலும், தலையும் புரியாமல் ஆடுவார்கள். இந்த வகை மருத்துவர்கள் பாலிலிருந்து வெண்ணெய் போல மற்ற மருத்துவர்கள் சொல்ல, நான் வெண்ணெயிலிருந்து பாலைச் சொல்வேன். பல நூ ல்களை நன்றாக ஆராய்ந்து சொல்கிறேன்.

68. விபரமா மட்ட லோகம்

விவரத்தை விரித்து சொல்வேன்

பரமாய லோக பற்ப

மதநிடை கெந்தி கட்டி

பேரமாய் வீரம் கால்தான்

சேர்த்துநீ பழச்சாத் தாலே

விபரமாய் சாம மாட்டி

வுத்தமோர் வில்லை கட்டே

மற்ற உலோகங்களின் பற்பங்களின் விவரங்களை விரித்துச் சொல்வேன். உலோக பற்பங்களுடன் கெந்தி கட்டி, அதில் கால் பங்களவு வீரமும் சேர்த்து பழச்சாற்றில் 3 மணி அநரம் அரைத்த பின் வில்லைத் தட்டிக் கொள்ளவும்.

69. கட்டியே ரவியில் காய்ந்தால்

கனதையா மொட்டில்வைத்து

வட்டியே வோடு மூடி

லப்பனே சீலை செய்து

முட்டியே கன புடமாய்

மூட்டியே யாறகீ கவிடு

கட்டியை யெடுத்துப் பார்த்தால்

சிவந்திடு முருக்கம் பூவே

தட்டிய விஷிலையை வெயிலில் காய வைத்து, கனமான ஓட்டில் வைத்து மேல் சட்டி மூடி முறைப்படி சீலமண் செய்து கனபுடமாய் போட ஆறியபின் எடுத்துப் பார்த்திருந்தால் சிவந்திருக்கும்.

70. லோக செந்தூரம்

பூவதாம் செந்தூ ரத்தைப்

பணவிடை பொசிக்கத் தேனில்

நவதாம் பத்து நாளில்

நன்றதாய் தீரும் நோய்கள்

சாவதாம் பாண்டு ரோகம்

சாந்த காமாலை பித்தம்

பாவதாங் குன்ம வாய்வு

பறந்திடும் பகரக் கேளே

பூப்போன்ற நல்ல அளாகியிருக்கும் செந்தூரத்தை 488 மிகி அளவு தேனில் குழைத்துச் சாப்பிட பத்து நாட்களில் பின்வரும் நோய்கள் பலவும் தீரும். பாண்டு நோய், காமாலை, பித்த நோய்கள், குன்ம வாயு ஆகியவைவாகும்.

71. பறந்திடும் நீர்தோ முங்கள்

மகோதரம் பாரிச வாழ்வு

வுசந்திடும் வீக்கம் சூலை

சார்வுள்ள கிரந்தி குட்டம்

பிறந்திடு மூல வாழ்வு

பிறந்கு நீராம்பல் பாவை

யகந்தனில் கெர்ப்ப மேவு

மதவகை சூலை போமே

நீர்த்தோடங்கள், மகோதரம், பாரிச வாயு,வீக்கம், சூலை,கிரந்தி, குட்டம்,மூல வாயு, கீராம்பல், கெர்ப நோய்கள், சூலை போன்ற நோய்களும் இச்செந்தூரத்தைப் பத்து நாட்கள் சாப்பிட்டு வர நீங்கும்.

72.காந்த செந்தூரம்

சூலைபோம் கெர்ப்பமுண்டாம்

சுகமுள்ள செந்தூ ரந்தானீ

மாலைய மாகச் சொல்வோம்

காந்த செந்தூ ரந் தன்னை

சாலவே லோகம் போல

சார்வு செந்தூ ரம் செய்ய

வாலையாந் தேனி லிக்கால்

மண்டல மருந்தக் கேளே

சூலை நீங்கும். கெர்ப்பமுண்டாகும். இவற்றை இச்-செந்தூரம் செயல்படுத்தும் என்பதாம். காந்த செந்தூரத்தை உலோகங்கள் செந்தூரம் செய்வதுபோல் செய்து கொள்ளலாம். இந்தச் செந்தூரத்தை தேனில் குழைத்துப் பத்து நாட்கள் சாப்பிட்டு வரவும்.

73. அருந்தவே வெண்மை யான
யதிக நீரிழிவு மாறந்
திரிந்திடுஞ் சயங்க ளீளை
காசமுஞ் சிரசில் தோழம்
பொருந்திய கிராணி பித்தம்
சலங்களும் போகுஞ் சொல்வேன்
யிருந்திடும் வாயு வெல்லாம்
யேகிடு மிதனைக் கண்டால்

வெண்மையாகச் சிறுநீர் கழிதல், நீரிழிவு நோய், சய நோய்கள், ஈளை, காசம், தலைதோஷம், கிராணி, பித்தம், சலம்போக்கு, பலவகையான வாயுக்களும் இந்தச் செந்தூரத்தைச் சாப்பிடுவதால் நீங்கும் என்பதாம்.

74. காரீய செந்தூரம் -
கண்டதோர் காரீயத் திற்
பற்பத்தை கருதிக் கேளு
வெண்டதோர் பற்பந் தக்கு
யிடைக்கிடை லிங்கமாட்டி கெந்தி
விண்டதோர் பழத்தின் சாத்தால்
சாமமே யரைத்து வில்லை
வோண்டவே யுலர வைத்து
வொட்டினில் வோடு மூடே

காரீயம், பற்பம் செய்யும் முறையை இங்குச் சொல்வேன். காரீய பற்பத்திற்கு எடைக்கு எடை லிங்கம் சேர்த்து ஆட்டி கெந்தியும் சேர்த்து ஆட்டி எலுமிச்சம் பழச் சாற்றால் 3 மணி நேரம் இரைத்து வில்லை தட்டி காய வைத்து ஓட்டில் போட்டு மேல் ஓடு மூடிக் கொள்ளவும்.

75. முடியே சீலை செய்து

முழப்புட மாறிப் பின்பு

நாடியே பொடித்துப் பின்பு

நல்லதோர் தேனில் கொண்டால்

கூடிய கிரந்தி சூலை

பதினெட்டு குட்டந் தீரும்

வொடிய பிற மேகங்கள்

வோளிந்திடும் வுண்மை தானே

மேலோடு மூடி சீலை மண் வலுவாகச் செய்து முழப்புட-மளவுக்கு வரட்டி அடுக்கி எரித்துப் புடமிட்டிறக்கிக் கொள்ளவும். ஆறிய பின் எடுத்துப் பொடித்துப் பின் தேனில் உட்கொண்டு வந்தால் கிரந்தி சூலை 18 வகை குட்டம்,பிரமேகம் பேர்ந்ற நீங்கிடும் என்பதாம்.

76. வெள்ளீயம்:

உண்மையாம் வங்க பற்ப

முறதியை சொல்லக் கேளு

வண்மையா மீயம் போல

வைத்திடு செந்தூ ரந்தான்

தன்மையா மனு பானங்கள்

தானறிந் தளிப்பா ராகில்

கன்மையா முடலி லுள்ள

வியாதியள் காணா தென்னே

இதன் பழி வெள்ளீய பற்பம் சொல்லப்படுகிறது.முன்னர் சொன்ன (ஈய)செந்தூரங்களைப் போன்ற செய்து கொள்ளலாம். இந்த வெள்ளீச் செந்தூரத்தைத் தக்க அனுபானங்களுடன் உண்டு வந்தால் உடலிலுள்ள வியாதிகள் பலவும் நீங்கும்.

77. தாம்புரம்

யெண்ணவே தாம்பு ரத்தில்

யிடைக்கிடை கெந்தி கட்டி

வுண்ணவே யெருக்கம் பாலில்

வூறவரைத் துலர வைத்து

துன்னவே வொட்டில் வைத்து

துலங்கவே வோடு மூடி

மன்னவே சீலை செய்து

கெசபுட மாட்டிப் போடே

தாமிரத்தின் எடை அளவு கெந்தியும் சேர்த்து எருக்கம் பாலில் அரைத்து உலர வைத்து ஓட்டினுள்ளே வைத்து மேலோடு மூடி சீலைமண் செய்து 1000 வரட்டியில் புடம்போட்டுக் கொள்ளவும்.

78. போட்டெடுத் தாமிர் பின்பு

புகழ்மயில் கழுத்தாம் வதனம்

நாட்டிடு தேனில் கொள்ளத்

பணவிடை நயந்துப் பாரு

காட்டிடு பத்து நாளில்

கடுகிய (கடுகிய) குன்மமெட்டும்

தாட்டிக வாயு வெல்லாத்

தட்டனித் தோகந் தானே

ஆறிய பின்பு எடுத்துப் பார்க்க தாமிரம் பற்பமாகியிருக்கும். இதனைப் பத்து நாட்கள் தொடர்ந்து தேனில் உட்கொண்டு வந்தால் எட்டு வகை குன்மங்கள், தாட்டிக வாயு, எல்லாம் நீங்கிவிடும் என்பதாம்.

79. <u>ரசிதம்:</u>

வோடிட வெப்புப் பாவை
யாம்பல மகோதரங்களி யாமை
கூடிடுந் திரண்ட வாய்வு
குலைபாங் கர்மை கேகு
யாடிடும் வெள்ளி பற்ப
மதநிடை கெந்தி கட்டி
நாடிடுஞ் சம்ப ளத்தால்
நயந்தரை சாமம் நாலே

வெப்புப் பாவை, மகோதரங்கள், ஆமைவாயு, குலைநோவு ஆகியவைவும் இனி தாமிர பற்பத்தைச் சாப்பிட்டு வருவதால் நீங்கும் என்பதாம். வெள்ளி பற்பம் எடுத்த அதே அளவு கெந்தியை அதனுடன் சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றால் 12மணி நேரம் தொடர்ந்து அரைக்கவும்.

80. நாவினில் வில்லை செய்து
ரவியினில் உலரப் போடு
யாவினில் யிலை போல
வொட்டில் யடையினை வைத்துமுடி
மாவினில் சீலை செய்து
வைத்திடு கெச புடந்தானி
பாவினில் முத்துப் போல
பவளம்போல் சிவந்து போமே

இதனை உருண்டைகளாக உருட்டிக் கொண்டு வெயிலில் காயவைத்து எடுத்துக் கொள்ளவும். ஓடு வைத்த ஓட்டினில் வில்லைகளை வைத்து மேல் ஓடு மூடி சீலைமண் வலுவாகச் செய்து 1000 வரட்டியை அடுக்கிப் புடம் போட்டுக் கொள்ளவும். வெள்ளியானது பவளம்போல் சிவந்து செந்தூரமாயிருக்கும்.

81. தங்க செந்தூரம்:

சிவந்திருக்கும் செந்தூ ரத்தைப்
பணவிடை திரிப் ராகில்
வந்தால் செய்யும் நோய்க்கு
கனுபான மறிந்து போடுக்
கலந்திடும் நோய்க ளெல்லாம்
கடலெங்கே கான மெங்கே
பலந்து லைந்தே குதற்கு
சூட்சத்தைப் பகர்ந்திட் டேனே

சிவந்திருக்கும். செந்தூரத்தை 488 மிகி அளவு தேனில் உட்கொள்ள பல நோய்கள் நீங்கும். கடலளவு நோய்களானாலும், காடளவு நோய்களானாலும் அவற்றை நீக்கும், சூட்சமத்தை நான் இங்கு சொல்வேன்.

82. மிட்டதோர் தங்க பற்ப
மிடைக்கிடை கெந்தி சூதம்
திட்டமாய் கூடச் சேர்த்து
சிவந்ததோர் பழச்சாத் தாட்டி
வட்டமாய் வில்லை செய்து
ரவியினில் வைத்து லர்த்தி
மட்டமாய் வோட்டில் வைத்து
மறுபடி வோடு மூடே

தங்கபற்பத்தை ஓரளவு எடுத்துக் கொண்டு அதே அளவு கெந்தியும், சூதமும் சேர்த்து எலுமிச்சம்பழச்சாறு கொண்டு அரைத்து வட்ட வட்ட வில்லைகளாகச் செய்து கொண்டு வெயிலில் போட்டு உலர்த்தி எடுத்துக் கொள்ளவும். மெல்லிய ஓட்டில் வைத்து மேலோடு மூடிக் கொள்ளவும்.

83. முடியே சீலை மண்செய்
முத்கியந் கெச புடத்தில்
வாடியே மயங்க வேண்டாம்
வயித்திய வாள ரேகேளீ
நாடியே செந்தூ ரத்தைப்
பணவிடை நல்கு வீரால்
கூடிய சன்னி பாதந்
குலை குலைந்தெகு மெண்டே

இரண்டையும் சேர்த்து சீலை மண் செய்து 1000 வரட்டியில் புடம் போடவும். ஆறியபின் எடுத்துப் பார்க்க அது செந்தூரமாக மாறியிருக்கும். வேளைக்கு 488 மிகி வீதம் 10 நாட்கள் (10x2 = 20 வேளை) சாப்பிட்டு வந்தால் ஜன்னிபாதம், குலைநோவு இவை நீங்கும்.

84. யேகுமே சுரங்க ளெல்லாம்
யிளைத்திடு மீளை காசம்
போகுமே மேக சூலை
புண்புரை சிலந்தி குட்ட
மாகுமே வறட்சி காந்த
லலைலெழுங் குன்ம வாய்வு
வாகுமே சய ரோகங்களீ
பித்தமும் வாங்கு மெண்டே

சுரங்கள் யாவும் நீங்கும். ஈளை, காசம், மேகசூலை, புண்புரை, சிலந்தி, குட்டம், வறட்சி, காந்தல், அலை உண்டாக்கும் குன்மவாயு, சயரோகங்கள், பித்தம் ஆகிய நோய்களும் மேற்கண்ட செந்தூரத்தைத் தொடர்ந்து உண்பதால் நீங்கும் என்பதே இதன் கருத்து.

85. குளிகை

வாங்கிடுஞ் செந்தூ ரத்தை

வரிசைய னெல்லாஞ் சொன்னேன்

பாங்குடன் குளிகை செய்யும்

வரிசைதானி பகரக் கேளு

வோங்கிய தங்க வங்க

முறதியா மீயம் வெள்ளி

நீங்கில்லாத் தாம்பிர லோகஞ்

செய்திடுஞ் செந்தூ ரந் தானே

செந்தூ ரம் செய்யும் முறைகளையும், அவை நீக்கும் நோய்களையும் நீக்கும் முறையையும் சொன்னேன். இனிமேல் குளிகைகள் செய்யும் முறைகளைச் சொல்வேன். தங்கம், வங்கம், ஈயம், வெள்ளி, தாமிரம் இவற்றைச் செந்தூ ரமாக்கிக் கொள்ளவும்.

86. தானிது வகைக் கழஞ்சு

செந்தூ ரஞ் சரியாய் னூக்கு

வானரி தார ஞ் கெந்தி

மனோசிலை வீரஞ் சூத

மானதோர் லிங்கங் கார

மனுவது கழஞ்சி யொண்டுத்

தானிது கல்வத்திட்டு

நாடியே யரைக்கக் கேளே

ஒவ்வொரு வகை செந்தூ ரத்திலும் 5 கி நிறுத்துக் கொண்டு அதனுடன் அரிதாரம் கெந்தி, மனோசிலை, வீரம், சூதம், லிங்கம், காரம் இவை வகைக்கு 5கி எடுத்து கல்வத்திலிட்டு சீராக அரைத்து எடுத்துக் கொள்ளவும்.

87. அரைத்திடும் பழச்சாத் தாலே
    யப்பனே சாம மொடுதீர
தரைப்புள் முலைப் பாலாலே
    சாமமே பிரட்டு நன்றாய்
வரைப்புள் குமரிச் சாறு
    வித்தம சாம மொன்டு
நிரைப்புடன் கையாந் சாறு
    நிலைத்திடுஞ் சாம மொன்றிடே

இவற்றை எலுமிச்சம்பழச் சாற்றில் 3 மணி நேரம் அரைத்துக் கொள்ளவும். பின்னர் தாய்ப்பாலில் 3 மணி நேரம் அரைத்துக் கொள்ளவும். பின்னர் குமரி எனும் கற்றாழைச் சாற்றால் 3மணி நேரம் அரைத்துக் கொள்ளவும். பின்னர் கையாந்தகரைச் சாற்றால் 3மணி நேரம் அரைக்கவும்.

88. வொன்டென வாட்டி யாத்தித்
    கயறது போலுருட்டி நீளம்
பன்டது நிழலில் காய்ந்து
    பூசையும் பரிவாய் செய்து
வன்டிது செப்பில் வைத்து
    வாட்டெல்லாஞ் சொல்லக் கேளே

இவற்றை வாட்டி உலர்த்தி கயிறுபோல் உருட்டி நீளமாக்கி பின்னர் நிழலில் காயவைத்து எடுத்து பயபக்தியுடன் பூஜை செய்து செப்பில் அடைத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

..34

89. ஆட்டுவ தென்ன வேண்டால்

காசிடை யிஞ்சிச் சாத்தில்

கூட்டிடு முலைப் பாலோடு

கொடுத்திடச்சன்னி யேது

நாட்டிலில் சுரங்க ளேது

நவின்றிடும் வாத மேது

வாட்டிடுஞ் சிலேஷ்பனங் களேது

மயங்கிய பித்த மேதோ

இம்மருந்தினை இஞ்சிச் சாற்றிலும், தாய்ப்பாலிலும் சேர்த்து வழங்கிட சன்னி வகைகள், சுரங்கள், வாதம், சிலேற்பனங்கள், பித்த நோய்கள் யாவும் நீங்கும்.என்பதாம்.

90. யேதென்ன மீளை காசம்

யிளைப்புடன் சயங்கள் மேகம்

வாதென்ன வந்த குன்மம்

வாய்வு வறட்சி காந்தல்

மாதர்கள் கெர்ப்ப ரோக

மங்கள காமாலை பாண்டு

ஊதுகாமாலை வாண்டு

மூலமும் முளையு மெனினே

இவற்றோடு ஈளை, காசம், இளைப்பு, சயங்கள், மேகம், குன்மநோய்கள், வாயு, வறட்சிநோய்கள், காந்தல், பெண்களின் கெர்ப்ப நோய்கள், வாந்தி, விக்கல், ஊதுகாமாலை, பாண்டு, மூலம், மூலமுளை இவை யாவும் மேற்கண்ட மருந்தை உட்கொண்டு வர நீங்கும்.

91. உளைவுசேர் கிராணி சூலை
ஒழுதி நீரழிவு குட்டம்
விளையுள்ள பீனி சங்களி
விழிகடி விழிநோ யோடு
யளைவெலா நோய்க ளெல்லா
மகன்றிடு மநு பானங்களி
தளவிசை யறிந்து செய்தால்
தரணி யில்நோய் நில்லாதே

உளைவு, கிராணி, சூலை நீரிழிவு, குட்டம், பீனிசங்கள், கண்நோய்களி போன்ற பல நோய்களி, ஈளை போன்றவையும் அகன்றிடும். அநுபானங்களை முழுமையாக அறிந்து பயன்படுத்தினால் நமக்கு வரும் நோய்களில் பலவற்றையும் போக்கிடலாம்.

92. நில்லாது நோய்க ளெண்ட
நிசமது யெது வாலே
வல்லாது வடிவோக
மாரண மான தாலே
செல்லாத மார ணத்தை
செந்தூ ரஞ் செய்கை யாலே
சொல்லாத சூட்சசந் தனினை
சொல்லிய நிவர்த்தி யாலே

நோய்களி நம்மை அணுக ஒட்டாது. நம்மிடம் தங்கவிடாமல் நீக்குதற்கு இலாகமாரணம் என்ற மாரணம் இருக்கிறது. செந்தூர மருந்து முறையின் கீழ் உருவாக்கப்படும் இம்மருத்துவ இரகசியத்தை யாரும் சொல்லவில்லை. நான் சொல்கிறேன்.

93. சொல்லிய சூட்சந் தன்னை
சோதினை யாகக் கண்டால்
சொல்லிய கர்ம மெல்லாந்
சரத்திடுஞ் சூட்சமு சூட்சம்
சொல்லிய சூட்ச மெல்லாஞ்
சோதினை யாகச் சொன்னேன்
சொல்லிய நூல்க ளெல்லாஞ்
சுத்தியா மிந்த நூலே

மேற்சொன்ன சூட்சத்தை சோதனை செய்வதற்காக எடுத்துக் கொண்டால் நாம் சொல்லிய கர்மம் எல்லாம் நீங்கி சூட்சா சூட்சம் உண்டாகும். இதன் விவரத்தை இந்நூல்போல் வேறு எந்த நூலும் வெளிப்படுத்தியதில்லை.

94. நூலெல்லாங்கண்டு தேர்ந்தால்
அணுக்கங்கள் தோயுந் தோயு
சாலவே சரக்குச் சுத்தி
சாத்திய கர்ம சூட்சம்
யேலயே யட்ட லோக
மாரண மியம்பி னோம்நாம்
பாலது போலா மிந்நூல்
பலமிது முன்னூ தென்னே

எல்லா வகையான நூல்களையும் கற்றுத் தேர்ந்தால் எல்லாவகையான நுணுக்கங்களையும் அறிந்து கொள்ளலாம். நாம் இதற்கு முன்னர் சரக்கு சுத்தி முறைகளைச் சொன்னேன். சாத்திய, அசாத்தியம் பற்றிச் சொன்னேன். எட்டுவகை உலோக மாரணங்களைச் சொன்னேன். இந்த வகையில் இது முதன்மையான நூலாகும்.

95. முன்னூறு முப்பத் தாறு

முதமொழி கர்ம சூத்திரம்

முன்னூறு நூற் றம்பது

முறையுடன் முடிவ தாமே

முன்னூல் தானா யிரத்து

யிருநூறு மறு நூறாகும்

முன்னூத் தானா யிரத்தை

யதிகமாய் மொழிந்த வாறே

முன்னூற்று முப்பதாறு பாடல்களைக் கொண்ட கர்ம சூத்திரம், 300,150 என முடியுமாறு அமைத்தேன். இதன் முன்னூல் 1800 பாடல்கள் கொண்டதாகும். இதில் ஆயிரம்(1000) பாடல்களை அதிகமாக வைத்து நான் பாடி முடித்தேன்.

96. வாறுகேள் முன்னூ லாய்ந்து

வடமொழி தமிழாய்ச் செய்தேன்

வாறுகேள் வாதம் யோகம்

ஞானமும் வகையாய்ச் சொல்வேன்

வாறுகே ளதிகமா யிரத்தில்

மித்தியஞ் சொன்னேன் நன்றாய்

வாறுகேள் முன்னூ லெல்லாம்

வகைவகை யாய்ந்து பாரே

முன்னூலை முழுதுமாகத் ததுணர்ந்து வடமொழியில் அமைந்த மூலநூலைத் தமிழில் பாடினேன். வாதம்,யோகம்,ஞானம் முதலியவற்றை வகையாகச் சொல்வேன். முதல் நூலை எல்லாம் முறையாக ஆய்ந்து ஆயிரம் பாடல்களில் இந்நூலைப் படைத்தளித்தேன்.

97. ஆய்ந்திடும் முன்னூ லெல்லா

மறிந்துநீ பார்த்தா யானால்

கோய்ந்திடும் வாதம் ஞானம்

வயித்தியம் லோக கற்ப

மாய்ந்திடும் லோகத் தோற்கும்

பிணியினால் மரண மில்லை

பாய்ந்திடு மம்பு போலே

பாவத்தி னிவர்த்தி யாமே

இதற்கு முன்னுள்ள நூல்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்தால் வாதம், ஞானம், மருத்துவம், உலோக கற்பங்கள், ஆகியன தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதனை உணர்ந்து பயன்படுத்தினால் பிணிகள் நீங்கி மரணமிலா பெருவாழ்வு வாழ்ந்திடலாம். செய்த பாவங்களுக்கெல்லாம் நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

98. பாவத்தி னிவர்த்தி செய்து

வயித்தியம் பார்த்து பாரு

சாபத்தி நிவர்த்தி தன்னை

சாற்றினோம் முன்னூ த் தனிலே

யாபத்துங் கோப மெல்லா

மறிவுள்ள வயித்தி யோர்க்கு

சீவத்தி னுகதி யாகு

சிவபூசை திருத்தச் செய்மே

பாவத்திற்கான நிவர்த்திமுறைகளை எல்லாம் செய்தபின்னர் சாபங்களும் கூட நிவர்த்தியாகும். எனது முன்னூலிலேயே நான் சொல்லியுள்ளேன். ஆபத்தை உண்டு பண்ணுகிற கோபம் நீங்கி மருத்துவத்தை முறையாக நீ பார்ப்பதற்கு சிவபூஜை செய்து கொண்டால் சீவனில் ஆயுள் பெருகும்.

99. செமிவது வயித்தி யநீதாவீ
வடுகனைச் சிறந்த பூசி
கைவரு மட்ட கர்மமஞ்
சிதம்பரங் கருதி பாரு
வுய்வது மெல்லாஞ் சித்தி
நாட்டியி ளுறதி யாலே
நய்யும் பிணியுடலில் வந்த
களவது வாடி யாலே

சிவபெருமானை சிறையாகப் பூசித்து தொடங்கினால் மருத்துவத்தில் எட்டுவித கர்மங்களும் கைகூடும். சிரம்பரத்தில் குடிகொண்டிருக்கும் நடராசரைப் பூசித்தால் தொட்டதெல்லாம் சித்தியாகும். நாடியின் மாற்றங்களால் உண்டாகின்றவற்றை எல்லாம் நாம் சாத்தியமாக்கலாம்.

100. நாடி தானறிய வேணும்
நயந்தினைக் காண வேணும்
கூடிப் பிணிதான் செய்யுங்
குறிகுண மறிய வேறணும்
தேடிய மருந்தின் பாகஞ்
செந்தூ ர மறிய வேணும்
வாடியே மயங்க வேண்டாம்
மருந்தினாக மத்தைக் கேளே

ஒரு நோயை அறிந்து கொள்வதற்குமுன்னர் நாடியை அறிய வேண்டும். நாடி மாற்றத்தால் ஏற்படுகின்ற பிணிகளின் குறிகுணங்களை அறியவேண்டும். மருந்தின் தன்மைகளை அறிய வேண்டும். செந்தூரம் போன்ற மருந்தின் முறைகளை உணரவேண்டும். எனவே அவ்வகை மருந்துமுறைகளை இனிச் சொல்வேன்.

101. கடுக்காய் - லேகியம்.

கேளுநீ கடுக்காய் நூறு
பலமது வியாளத் தக்கு
வாருநீ யிடித்துத் தோண்டி
வைத்திடு தாளிக் குளிலே
தாளுநீ தூணி வெள்ளஞ்
சலமது சரியாய் விட்டு
யாளுநீ யெட்டொன் டாக்கி
யதுதனை வடித்து வாங்கே

100 கடுக்காய்களை நன்றாக இடித்துத் தூளாக்கி பாத்திரத்திலிட்டு எட்டுலிட்டர் தண்ணீர் விட்டு அது எட்டில் ஒன்றாகச் சுருங்கக் காய்ச்சி குடிநீரை வடித்துக் கொள்ளவும்.

102. வாழ்கிய வியாளத் தக்கு
மருந்துநீ மருவிக் கேளு
வோங்கிய சிவதை யிஞ்சி
வுத்தம மிளகு வோமம்
பாங்குள்ள கடுக்காய்
திப்பிலி பஞ்ச தாரை
யாங்கிதை யரைத்துப் போட்டு
யாவின்நெய் படிதா னாமே

சிவதை, இஞ்சி, மிளகு, ஓமம், கடுக்காய், திப்பிலி, பஞ்சதாரை இவற்றை மொத்தமாகச் சேர்த்து விழுதாக அரைத்து 1.3லிட்டர் ஆவின்நெய் சேர்த்து காசயத்திலிட்டு எரித்துக் கொள்ளவேண்டும்.

..41

103. ஆமத கிராயத் தனிலே
பலமதா யரைத்துப் போட்டு
வாய்த்த பாகு போலே
வற்றிய போது நெய்யை
வோமத விட்டுக் கிண்டி
யுத்தம லேகி யத்தை
தாமத பகலம் பண்ணி
புன்னைக் காயளவு காணே

முன்னர் காய்ச்சி வைத்திருக்கின்ற கடுக்காய் குடிநீரில் அரைத்த விழுதையும், நெய்யையும் சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி வற்றி வரும்போது ஓமத்தையும் சேர்த்து இலேகியமாகக் கிண்டிக் கொள்ளவும். பின்னர் அந்த லேகியத்தைப் புன்னைக் காயளவு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும்.

104. அளவிடை யுருட்டி கொள்ள
யக்கினி மாந்தஞ் சூலை
கொளவிட்ட மல சலங்கள்
கூடிய வாயுப் பித்த
தமுனிய மூல மாறு
தானிது தீருமெஞ்டே
பகுதில்லா முனிவர் சொன்ன
வாித்தி பாித்துப் பாரே

வேளைக்கு ஒரு உருண்டை வீதம் இருவேளை தொடர்ந்து உண்டுவர அக்கினி மாந்தம், சூலை, மலசலக் கோளாறுகள், வாய்வுபித்த,மூலம் போன்ற பல நோய்கள் தீரும்.

105. சுக்கு லேகியம்:-

பாருநீ நெல்லிக் காயின்
கியாளத்தைப் பரிந்து கேளுத்
தாடுநீ பல நூறுக்குத்
தானிது னுணி நீரில்
வாருநீ யெட்டொன் றாக்கி
வட்டிநீ சட்டி வார்த்து
சீருநீ மருந்து கேளு
திப்பிலி மிளகு சுக்கே

8 விட்டர் தண்ணீரில் நூற்றுக்கணக்கில் நெல்லிக்காய்களை இடித்துப் போட்டு காய்ச்சி எட்டில் ஒன்றாகக் குறுக்கிக் கொள்ளவும். இறக்கி வடிகட்டி அதனுடன் திப்பிலி, மிளகு, சுக்கு இவற்றையும் சேர்த்துக் கொள்ளவும்.

106. சுக்கோடு வோம மூல

கிராம்பு கச்சோல மேலம்
குக்கிலும் வாய்வி ளங்கம்
சீரகம் கொத்த மல்லி
வுக்குவாய் விளங்கம் சுகை
நீறுடன் மதுரம் வோண்டு
சக்கரை பலமும் பத்து
தானது கரைத்துக் கொள்ளே

ஓமம், சித்திரமூலம், கிராம்பு, கச்சோளம், குக்கில், வாய்-விளங்கம், சீரகம், கொத்துமல்லி, அதிமதுரம், இவற்றைச்சேர்த்து இடித்து 350கி சர்க்கரையைச் சேர்த்து கரைத்து அதனுடன் சேர்த்துக் கொள்ளவும்.

107. கரைத்திடு மருந்தை யெல்லாங்

கியாளத்தில் கரைத்துக் காய்ச்சி

வுரைத்திடும் பாகு சேரில்

வோருபடி நெய்யைத் தூவி

நிரைத்திடுங் கிண்டிக் கிண்டி

நேரமொழு கென்ன வாங்கி

பரைத்திடும் பதலம் பண்ணி

பாக்கள வாகப் பண்ணே

இடித்த மருந்துகளையும் கரைத்த சர்க்கரையையும் கசாயத்தில் சேர்த்துக் கரைத்துக் கொண்டு 280கிராம் சர்க்கரை பாகில் 1லிட்டர், நெய்யைச்சேர்த்து மொத்தமாகச் சேர்த்து கிளரிக் கொள்ளவும். லேகிய பதமாக வரும்போது இறக்கிக் கொள்ளவும்.

108. பாக்கள வாகக் கொள்ள

மண்டலம் காயில பாடு

வூக்குள மேக மஸ்தி

சுரமது வூளலை காந்தல்

போக்குள கிராணி வாய்வு

பொருமல யிரும லோடு

தீக்கு சயமு மீறை

சிலேப்பனம் நிகழ்ந்து போமே

இந்த லேகியத்தைப் பாக்களவாக உருட்டி 40 நாட்கள் உட்கொண்டு வரவும். மேகம், அஸ்திசுரம், உழலை, காந்தல், கிராணி, வாயு, பொருமல், இருமல், சயம், ஈளை, சிலேத்பனம் ஆகிய நோய்கள் நீங்கும்.

109. தான்றிக்காய் லேகியம்_

போமதை தான்றிக் காயின்

லேகியம் புகலக் கேளு

வாமதை பலந்தான் நூறு

வலியதை நாழி நீரில்

ஏமதை யெட்டொன் றாக்கி

விடையமுஞ் சாதிக் காயும்

தாமதை அபினி கஞ்சா

தானிபலம் ஒன்றா தாமே

தான்றிக்காயின் லேகியம் சொல்வேன். செய்பாயாக. தான்றிக்காய் 3500கி நிறுத்து எட்டுபடி நீரிலிட்டுக்காய்ச்சி எட்டில் ஒன்றாகக் குறுக்கிக் காய்ச்சி கசாயமாக்கிக் கொள்ளவும். சாதிக்காய், அபினி, கஞ்சா இவை வகைக்கு 35கி அதனுடன் சேர்த்துக் கொள்ளவும்.

110. வொன்றதை மருந்தை யெல்லாஞ்

நூறவிடித் தூளாய்ச் செய்து

நன்றதாய்ச் சீனி பத்து

பலமதை நவிலக் கேளு

கண்டனை கியாளந் தன்னில்

கரைத்துப் பாகதிலே சேரில்

வேண்டமு சூர ணத்தை

பாய்ச்சிநெய் ஊத்திக் கிண்டே

மருந்துப் பொருட்களைத் தூளாக இடித்துக் கொண்டு, சீனி 350கி, இடித்துப் பாகாக்கி குடிநீரிலே கரைத்து எல்லாவற்றையும் மொத்தமாகச் சேர்த்து அடுப்பேற்றி தேவையான அளவு நெய்யூற்றி இலேகியமாகக் கிண்டி பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

111. கிழ்டியே மெழுகு போலே
பதத்தினில் கிரபை யாக
மழ்டலஷ் கொள்ளு ராகில்
வயிற்றினில் பொருமல் வாய்வு
கஷ்டிய கடுப்பு ரெத்த
மதிசாரத் கிராணி மூலம்
கஷ்டுள வாவு வெல்லாம்
முஷ்டினம் பறந்து போமே

மெழுகு பதமாகும்போது இறக்கிக் கொண்டு தொடர்ந்து 40 நாட்கள் சாப்பிட்டு வர வயிற்றுப் பொருமல் வாயு, கடுப்பு ரத்தம், அதிசாரம், கிராணி, மூலம், பழம் வாயுக்கள், உடல்வெப்பம் இவையெல்லாம் நீங்கும்.

112. மறந்திடு மென்று சொல்லி
திரிபலை பலத்தைச் சொன்னோம்
சிறந்திடுந் திரி கடுகின்
குணத்திறை யங்கள் செப்பும்
உரைத்திடுஞ் சுக்கு நூறு
பலமது வுகந்து வாங்கி
வுரைத்திடுஞ் சிலந்தாஷ் னி
யதில்விட்டு யெட்டொன் டாக்கே

திரிபலை கொண்டு செய்யப்பட்ட மருந்தைச் சொல்லி அதனால் நீங்கிடும் நோய்கள் பற்றிச் சொன்னேன். இனி திரிகடுகின் குணத்தை செப்புவேன். 3500 கிராம் சுக்கை இடித்துத் தேவையான அளவு தண்ணீர் விட்டுகாய்ச்சி எட்டொன்றாகக் குறுக்கிக் காய்ச்சி இறக்கி கசாயம் வடிகட்டிக் கொள்ளவும்.

113. ஆக்கிய பனையின் வெல்ல
மதநிடை பலந்தான் பத்துத்
தாக்கியே கரைத்துக் கொண்டு
தானது பாகு சேரில்
நோக்கியே யிதனுக் குள்ளே
நகந்தனைச் சொல்லக் கேளு
தாக்கியே படி தானோமத்
கரியின் வேப்பிலையிற் னு ளே

350கி வெல்லத்தை நீரில் கரைத்துப் பாகு செய்து கொள்ள வேண்டும். இதனோடு 1.3லிட்டர் ஓமத்தைப் பொடித்துச் சேர்த்துக் கொள்ளவும். மேலும் அதில் பொடித்த கரிவேப்பிலைத்தூ ள் 1.3லட்டர் சேர்த்துக் கொள்ளவும்.

114. ஆ ள்வகை ரெண்டுங் கட்டித்
ஆ வியே கிண்டிக் கிண்டி
யானது யாவின் நெய்தா
னைரப்படி கூட விட்டு
கூளது போலே வாங்கிக்
கொள்வது புள்ளைக் காயாம்
நாளது நாற்ப துக்குள்
நவிலுறோந் தீரு நோயே

இந்தத் ஆ ள்வகை இரண்டையும் ஆ வி கிண்டி கிண்டி விடவேண்டும். இதனுடன் ஆவின் நெய் 650மிகி சேர்த்துக் கிளறிவிட வேண்டும்.மெழுகு பதமாகும்போது இறக்கிக் கொண்டு வேளைக்குப் புள்ளைக்காயளவு வீதம் 40 நாட்கள் உண்டு வரவும்.

115. திருநோய் கிராணி மூலந்

திசவாய்வு வதிசாரங்கள்

வாருந் கடுப்பு ரெத்தம்

பாரிச வாய்வு தீரும்

சேருந் பொருமல் மந்தஞ்

செரியாமை புளித்தெப் பங்கள்

யாருந் யறியச் சொன்னோ

மகஷ்டிடு மறிந்து கொள்ளே

40 நாட்கள் தொடர்ந்து உண்டுவர கிராணி, மூலம்,தசவாயு, அதிசாரங்கள், கடுத்து இரத்தம் போதல்,பாரிச வாயு இவை நீங்கும். பொருமல், மந்தம், செரியாமை,புளியேப்பம் ஆகியவையும் நீங்கும்.

116.மிளகு லேகியம்

அறிந்து கொள் மிளகு சுன்னம்

அதில் நூ ற பலந்தான் வாங்கி

செறிந்துகொள் நூ ணி நீரில்

சிக்கென யெட்டொன்டாக்கி

பறிந்துகொள் கல்கண் டப்பாய்

பலமது பத்தும் போட்டு

முறிந்திடக் கிண்டிக் காய்ச்சி

பாகுபோல் வாங்கு முன்னே

மிளகுச் சுன்னம் 3.500கிராம் எடுத்து தேவையான அளவு நீரெடுத்து அதில் இத்னு ளைப் போட்டு அடுப்பேற்றி எட்டில் ஒன்றாகக் குறுக்கிக் காய்ச்சிடவும்.350கி கல்கண்டைப் பொடித்துப் போட்டு நீரில் ஊறவிட்டு பாகுபோல் காய்ச்சிக் கொள்ளவும். அவ்வாறு பாகு காய்ச்சும்போது முறிந்திடாமல் மிதமான தீயில் காய்ச்ச வேண்டும்.

.....48

.கிணை

117. முன்னது வாத்தையக்கிரா காரம்

சீரகம் முதி கிராம்பு

மன்னது யெலம் கோட்ட

மதிகமா மதுரந் தேத்தான்

பன்னது வாய்வி ளங்கம்

பத்திரி நறுக்கு மூலம்

சொன்னது வகை யொன்றுக்குப்

பலமது தூக்கி டாயே

மேலும் அக்கிராகாரம், சீரகம், கிராம்பு, ஏலம், கோட்டம், அதிமதுரம், தேத்தான், வாய்விளங்கம். பத்திரி, நறுக்குமூலம் இவை வகைக்கு 35கி வீதம் நிறுத்தெடுத்து தனித்தனியே இடித்துச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

118. தூக்கியே பொடித்துக் கொண்டு

பாகினில் தூவிக் கிண்டி

யாத்திய நறுநெய் நாழி

யதில்பாதி தேனு மாகும்

பாத்திய மெழுகு போலே

பதத்தனி லதனை வாங்கி

போத்தினி வாங்கி வைத்து

நுணுக்கத்தைச் சொல்லக் கேளே

பொடிகளைத்தூவி(பாகில்) கிண்டி நறுநெய் 1.3லிட்டர், 650மிலி தேன் இவற்றைச் சேர்த்து தொடர்ந்து கிண்டி மெழுகு பதமாகும் வரை கிளறி எடுத்து இறக்கிக் கொள்ளவும். பாது-காத்து வைத்துள்ள இம்மருந்தை பயன்படுத்தும் நுணுக்கம் சொல்வேன்.

119. சொல்லக்கேள் தீரும் நோய்தான்
சிலேட்பனந் தொண்ணூ று தானு
மல்லக்கேள் பகங்க ளெல்லா
மறந்திடும் நீர்த்தோ டம்போம்
சொல்லக்கேள் சில விடங்கள்
தீர்த்திடுஞ் சுரங்கள் தீரும்
வல்லக்கேள் வாதந் தீரும்
வாய்வும் வாங்குந் தானே

இந்த ரூகு லேகியத்தைச் சாப்பிட்டு வர தொண்ணூறாறு வகை சிலேற்பனங்கள், கபநோய்கள், நீர்த்தோடங்கள், சில-விடங்கள், பலவகை சுரங்கள், பலவகையான வாதங்கள், வாய்வுகள், ஆகிய எல்லா நோய்களும் நீங்கும்.

120. திப்பிலி லேகியம்:
வாங்குத் திப்பிலிதானூ று
பலமது அணி நீரில்
வோங்கியே யெட்டொன் றாக்கி
மருந்தினை யுரைக்க கேளு
பாங்கு கற்கண்டு பத்து
பலமது பாகு சேர்
வாங்கு சுக்கோடு கடுக்கா யரத்தை
யக்கிரா கார மோமம்

3.500கிராம் திப்பிலியை இடித்துத் தேவையான அளவு தண்ணீரில் போட்டு எட்டொன்றாகச் சுருக்கக் காய்ச்சி கசாயம் வடித்துக் கொள்ளவும். 350கி கற்கண்டை இடித்துத் தூளாக்கி பாகு காய்ச்சிக் கொள்ளவும். சுக்கு, கடுக்காய், அரத்தை, அக்கிரா காரம், ஓமம் இவற்றையும் சேகரித்துக் கொள்ளவும்.

121.வோமமே சீர கந்தானும்

ஒத்ததோர் கொத்த மல்லி

நாமமே வெளய்பா லோடு

செண்பகப் பூவுங் கோட்டம்

நாமமே வகை யொன்றுக்குத்த

பல மொன்று வாங்கி

சாமமே யிடித்துத் தூளாய்

தாக்கிநீ கிண்டி வாரே

ஓமத்துடன் சீரகம், கொத்தமல்லி, செண்பகப்பூ, கோட்டம், இவை வகைக்கு 35கி எடுத்து இடித்துத்தூளாக்கி அதினுடன் சேர்த்துத் தூவிக் கிண்டி கிண்டிக் கொள்ளவும்.

122.வாக்கிடு நெய்யுந் தேனும்

வகையது வூரி யுழக்கு

காய்ந்திடு மெழுகு வொலத்

தானது வாங்கி வைத்து

காய்த்திடுந் தானிக் காயில்

விடை கருதித் தின்ன

மாய்த்திடும் பிணிக ளெல்லாம்

மண்டலந் தன்னில் கொள்ளே

நெய் இரண்டுபடி, அதில் பாதி தேன் சேர்த்து முன் சரக்குகளுடன் சேர்த்துக் கிண்டி மெழுகு பதத்தில் இறக்கிக் கொள்ளவும். தானிக் காயளவு 40 நாட்கள் வர சாப்பிட்டு வந்தால் பின் சொல்லப்படுகிற நோய்கள் எல்லாம் நீங்கும்.

123. தனியே சிலேத்து மந்தாவி
தட்டளிந் தொடியி போகு
மனிய வாதம் போகு
மதிசார மிருமல் போகும்
முனிய வாயுவுந் தீரும்
முப்பிச மாந்தை தீரும்
பனிய யீளை காசி
பயப்படும் பாரு பாரே

இந்த லேகியத்தை உட்கொண்டு வந்தால் சிலேட்டும நோய்கள் எல்லாம் ஒழிந்து போகும். வாத நோய்கள் நீங்கும். அதிசாரம்இ இருமல், வாயு, உப்பிசம், மாந்தை, ஈளை, காசம் ஆகிய நோய்கள் இம்மருந்தன்டஅம் பறந்து போகும் என்பதாம்.

124. ஐங்காய லேகியம்:
பாடு முக்கடுகு சொல்வேன்
பகர திரிபலையுஞ் சொல்வேன்
யாடும் வெள்ளுள்ளிப் போக்கு
யறையி றேன்ன் காயத்தை
சீருடன் பலமீது றப்பா
சிலமது அவி காய்ந்து
யாறவே யெட்டொன் டாக்கி
வடித்திடு மருந்து கேளே

முக்கடுகு லேகியம் சொல்வேன். திரிபலை லேகியம் சொல்வேன். வெள்ளுள்ளி எனப்படும் பூண்டு சேர்ந்த ஐங்காயம் பற்றிச் சொல்வேன். ஐங்காயத்தை 3.500கி நிறுத்து இடித்து தேவையான அளவு தண்ணீர் ஊற்றி கொதிக்க வைத்து எட்டொன்றாக்கி கசாயம் இறக்கிக் கொள்ளவும்.

125.மருந்துதனே காயஞ் சுக்கு
வால்முள கடுகிந் துப்பு
திரிந்திய வோட மேலந்
திப்பிலி மிளகு சீரம்
மருந்திரி பலையும் வெட்பாலை
விடையமும் பலம தாக
பொருந்திய வாய்வி ளங்கம்
போட்டிடு சீனி யோடே

காயம், சுக்கு, வால்மிளகு, கடுகு, இந்துப்பு, ஓமம், ஏலம், திப்பிலி, மிளகு, சீரகம், திரிபலை, வெட்பாலை, அதிவிடையம், இவை வகை 35கி எடுத்து இடித்துக் கொள்ளவும்.

126, போட்டிடு சீனி நாளிப்
புகழ்போறப் பாகு செய்து
மாட்டிடு சூர ணத்தை
வாத்திடு பசுவின் நெய்பால்
நாட்டிடும் படி காவாம்
நவின்டதோர் மருந்தொன் டாகக்
காட்டிடு மெழுகு போா
கஷ்டிடும் புள்ளைக் காயே

மேற்சொன்ன மருந்து சரக்குகளுடன் சீனியையும் சேர்க்க வேண்டும். 1.3லிட்டர் சீனியை நீரில் கலந்து நன்றாகப் பாகு காய்ச்சி பசுவின் நெய் சேர்த்து (325 மிலி) அடுப்பேற்றி இலேகியம் கிண்டவும். இது நன்றாகச் சுண்டி மெழுகு பதமாக வரும் பதத்தில் இறக்கி விடவும்.

127.காயது போலே தின்டால்

கண்டிடும் வியாதி யெல்லாம்

நோயது வாய்வு வாதம்

தொடியினில் பறந்து போகு

மாயுமே குன்ம மெட்டு

ககண்டிடு மன்னக் செல்வம்

நீயது கண்டு கொள்ளு

நிச்சயஞ் சொல்லு றோமே

இந்த லேகியத்தைப் புளியைக் காயளவு எடுத்து 40 நாட்கள் தொடர்ந்து உண்டு வந்தால் பின்வரும் நோய்கள் எல்லாம் நீங்கி விடும். வாயுக்கோளாறுகள், வாத நோய்கள், எட்டுவகை குன்மங்கள் போன்ற பல நோய்கள் நீங்கும். இவை தவிரவும் இன்னும் பல நோய்கள் இந்த லேகியம் உண்பதால் தவிர்க்கப்படும் என்பதாம்.

128.கடுகு லேகியம் :-

சொல்லிய கடுகு நாழு

பலமது நா நீக்கிக் கொண்டு

நல்லிய நானி நீரை

நவிலுறோ மெட்டொன் டாக்க

தல்லிய கருப்புக் கட்டி

தான்பலம்பத்தச் சேர்த்து

வல்லிய பாகு செய்து

வதிவிடு மருந்து கேளே

3.500கி கடுகை எடுத்து 2.6லிட்டர் தண்ணீர் ஊற்றி எரித்து அது எட்டில் ஒன்றாகக் குறுக்கிக் காய்ச்சி கசாயம் செய்து கொள்ளவும்.350கி கருப்பட்டியைத் தண்ணீரில் கரைத்துப் பாகு செய்து கொள்ளவும்.

129. கேளப்பது வோமஞ் சுக்கு
திப்பிலி கிராம்பு காயம்
நாழிப்படு கொத்த மல்லி
சீரகம் நவிலக் கேளு
தாழிப்படு வாய்வி ளங்க
மஞ்சளும் விடையந் தானும்
வெளிப்படும் வகை யொன்றுக்குப்
பலமொன்று விரைந்து கட்டே

ஓமம், சுக்கு, திப்பிலி, கிராம்பு, காயம், பழைய கொத்தமல்லி, சீரகம், வாய்விளங்கம், மஞ்சள், அதிவிடையம் இவை வகைக்கு 35கி எடுத்து இடித்துத் தூளாக்கி எடுத்துக் கொள்ளவும்.

130. கட்டியே பொடித்துத் தூளாய்
குலாவிய பாகில் சேர்த்து
காட்டி நல்லெண்ணெய் தானும்
கால்படி கலந்து கிண்டி
நாட்டிய மெழுகு போல
நலம்பட வழித்து வைத்து
தீட்டிடும் புன்னைக் காய்போல்
மருந்தின் சிகிச்சை கேளே

இம்மருந்துகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து இடித்துத் தூளாக்கிப் பாகில் சேர்த்து அதனுடன் 325கி நல்லெண்ணெய் சேர்த்து கலந்துகிண்டி வரவும். சூடேறி மெழுகு பதமாக வரும்போது இறக்கி வழித்து வைத்துக் கொள்ளவும். இதனைப் புன்னைக் காயளவு உருட்டிக் கொள்ளவும்.

வண்ணம்

131.கட்டியே பொடித்துத் தூளாய்

குலாவிய பாகில் சேர்த்து

சிகிச்சையா மூல ரோகம்

வாய்வுத் திரட்சி தானும்

சிகிச்சையாம் புளித்தேப் பங்கள்

செரியாமல் பொருமல் தானும்

பகிச்சையாங் குன்ம வாய்வும்

பதறாமல் சலங்கள் ரெத்தம்

வெகுச்சையாம் புழுக்கள் தீரும்

வெந்தையம் பாரீத கேளே

இடித்துப் பொடித்த மருந்துகளை பாகில் சேர்த்துக்கிண்டிய இம்மருந்தினைச் சாப்பிடுவதால் மூல நோய், வாயுத்திரட்சி, புளித்தேப்பங்கள், செரியாமை, பொருமல், குன்மவாயு, சலக்கழிச்சல், இரத்தக் கழிச்சல், வயிற்றில் உள்ள பூச்சிகள் ஆகியவைகளும் குணமாகும்.

132.வெந்தைய லேகியம்

பாரிந்த வெந்தையந் தானாறு

பலமது வாங்கிக் கொண்டு

மருந்திடுஞ் சிலந்தானி தூணி

மதில்விடுத் தெட்டொன் றாக்கி

தெரிந்திடும் பஞ்ச தாரை

* சிறந்திடும் பலந்தானு பத்து

3.500 கிராம் வெந்தையத்தைத் தேவையான அளவு தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து எட்டிலொன்றாக்கி கசாயமாக்கி இறக்கி வடிகட்டிக் கொள்ளவும். இதனுடன் 350கி பஞ்சதாரையைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். சீனிப்பாகு செய்து இதனுடன் கலந்து கொள்ளவும்.

*கறந்திடும் பாகு செய்து

மேல்மருந் ததனிற் காணே

..பின் 56

விருத்தம்

132எ) காசதில் மதுரங் கோட்டஞ்
        சீரகஞ் கச கசாவும்
    பூணதி விடைய வோமம்
        சாதிக்காய் கிராம்பி னோடு
    தாளவிழ் கஞ்சா சுக்கு
        குரோசாணி பலமாய் ஊக்கி
    நுணவே பொடித்துக் கொண்டு
        வூறவிடு பாகு தன்னில்

அதிமதுரம், கொட்டம், சீரகம், கசகசா, அதிவிடையம், ஓமம், சாதிக்காய், கிராம்பு கஞ்சா, சுக்கு குரோசாணிஓமம், இவற்றை வகைக்கு 35கி வீதமெடுத்து நன்றாக இடித்துப் பொடியாக்கிக் கொண்டு முன் தயாரித்த சர்க்கரை பாகில் ஊறவிட வேண்டும்.

133)பாகுனில் நறுநெய் நாளிப்
        பாலது விட்டுக் கிண்டி
    வாறனி மெழுகு போல
        வாங்கியே வைத்துக் கொண்டு
    வாகினி கடுப்புக் கெல்லா
        மாட்டிடு கழஞ்சி வீத
    மாகினிக் கிராணி யெண்ட
        வகையெல்லா மகண்டு பேதமே

அத்துடன் பாகுடன் சுத்தமான இருக்கியுனக்க நெய் 1.3லிட்டர் சேர்த்து அடிபிடிக்காமல் தொடர்ந்து கிண்டி விடவேண்டும். அது சுருங்கி மெழுகு பதமாகும் பக்குவத்தில் இறக்கிப் பத்திரமாகப் பதனம் செய்யவும். சிறு உருண்டையாக உருட்டி (சுமார் 5 கி எடை) 40 நாட்கள் சாப்பிட்டு வர நீர்க்கடுப்பு, மலக்கடுப் ,இவை நீங்கும். கிராணி வகைகள் எல்லாம் நீங்கும்.

வசியினம

134) ஓம_லேகியம்:

அகன்டிடும் வோமத் தந்கு

வறையிறேன் பலம்நா றய்பாய்

புகன்டிடுந் சிலந்தாவி னு னி

புகுட்டியே மெொோண் டாக்கி

நகன்டிடுஞ் சக்கரை தாவிபலம்

பத்த நாட்டிக் கொண்டு

நிகன்டிடும் பாகு செய்து

நிச்சய மருந்து கேளே

ஓமம் 3.500கி எடுத்து 2.6லிட்டர் தண்ணீர் விட்டு அடுப்பேற்றி எட்டிலொன்றாகக் குறுக்கிக் காய்ச்சி வடித்தெடுத்துக் கொள்ளவும். இதனுடன் 350கி சர்க்கரை சேர்த்துப் பாகு காய்ச்சிக் கொள்ளவும்.

135) சொல்லக்கே ளமுக்கி ராவேர்

குக்கிலுஞ் சீனப் பாகும்

நல்லக்கேள் கார கொவோடு

நாட்டது வகை பலத்தாவ்

யவ்லக்கேள் சூர ணத்தை

யப்பனே யதனில் பாய்ச்சு

செல்லக்கேள் நமநெய் நாழி

விட்டறில் கிண்டி வாங்கே

அமுக்கிராவேர், குக்கில், சீனப்பாகு, அக்கிராகாரம் இவை வகைக்கு 35கி வீதம் எடுத்துப் பொடித்து அந்தச் சூரணத்தை மேற்சொன்ன குடிநீர் சர்க்கரைப் பாகு கலவையுடன் சேர்த்து 1.3 லிட்டர் நமநெய் சேர்த்து கிண்டி மெழுகு பதம் வரும்போது இறக்கிப் பதப்படுத்திக் கொள்ளவும்.

136) வாங்கியே கழஞ்சி வீத
மண்டலம் கொள்வீ ராகில்
வொங்கிய பரங்கி சூலை
வுலர்ந்திடுஞ் சிரங்கு குட்டம்
தாங்கிய கிரந்தி புண்கள்
சார்ந்திடுஞ் சில விதங்கள்
மீங்கிசை யான வாய்வு
வாதமும் யெகு மெண்டே

இதில் 5கி அளவு தினமும் உண்டு (40 நாட்கள்)வந்தால் பெருகிவிட்ட பரங்கிப்புண், சூலை, சிரங்கு குட்டம், கிரந்திப்புண்கள், சில்விடங்கள், மிகுந்துவிட்ட வாயுக்கள், பலவகையான வாத நோய்கள் ஆகியவை நீங்கும் என்பதாம்.

137) பெருங்காய இளகம்
சேருமே காயந் தன்னை
யியம்புறோ மின்னுங் கேளாய்
பாச்சேர் சோம வாதி
பலமது யிருபத் தஞ்சு
வாருமே னுணி நீரில்
வாட்டியே யெட்டொன் டாக்கி
யாகுமே சீனி பத்துப்
பலமது வதனில் பாச்சே

இனி பெருங்காய இளகம் பற்றிச் சொல்வேன். கேட்பாயாக. பாச்சேரு எனப்படும் அகில், சோமவாதி எனப்படும் சிவனாமூலி இவற்றை 875கி அளவு எடுத்து இடித்து முறைப்படி கஷாயம் செய்து கொள்ளவும். இதனுடன் 350கி சர்க்கரையைக் கரைத்துப் பாகு செய்து அதில் சேர்த்துக் கொள்ளவும்.

138. பாச்சியே பாகு செய்தபி

பகர்ந்திடு மருந்த கேளு

மாச்சிய வெள்வெங் காயம்

கடுத்த மிளகு சுக்கு

வாச்சு திப்பிலியும் வோமம்

சீரக மதுரங் கோட்ட

பாச்சிய பல மொன்றாக

வாவின்நெய் படிகால் வாரே

பாகு செய்த அதனுடன் சேர்தெடுத்த பிள்ளர் வெள்ளை வெங்காயம், மிளகு, சுக்கு, திப்பிலிஓமம், சீரகம், மதுரம், கோட்டம், இவை வகைக்கு 35கி வீதம் சேகரித்துக் கொண்டு அதனுடன் 375கி நெய்யையும் சேர்க்கவும்.

139. காலது வார்த்துக் கிண்டி

காயவே மெழுகு கண்டால்

சாலவே வழித்து வைத்து

தானது கழஞ்சி வீதம்

யெலவே கொள்வீ ராகில்

யியம்பூதேன் தீரு நோயை

யெலமாம் வாய்வு வாதம்

வொடிடும் வுண்மை தானே

அடுப்பேற்றி அடிபிடிக்காமல் தொடர்ந்து கிண்டி மெழுகு பதமாக வரும்போது இறக்கி வைத்துக் கொள்ளவும். வேளைக்கு 5கிவீதம் சாப்பிட்டு வந்தால் பிணிவரும் நோய்கள் நீங்கும். வாயுத்கஷ்ட, வாதம் இவை நீங்கும்.

140. பத்தியம்:

உண்மையாய் மருந்து கொண்டால்
பத்தியமுரைக்கக் கேளுக்
கண்மையா மிளகு மஞ்சள்
சீரகஞ் கருதிக் கொள்ளுத்
தண்மையாய் கறி வகையள்
சாத்தவோர்ந்த தவியோர்கு
வண்மையாய் முருங்கைப் பிஞ்சு
வழுதலைப் பிஞ்சு மாமே

மேற்சொன்ன மருந்தை உண்ணும்போது மேற்கொள்ள வேண்டிய பத்தியமுறைகள் சொல்லப்பட்டுள்ளன. சீரகம், மிளகு, மஞ்சள் இவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். கறி வகையில் முருங்கைப் பிஞ்சும், வழுதலைப் பிஞ்சும் தவிர மற்றவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

141. பிஞ்சோடு வாழைக் காயும்
துவரையுமுன பிரண்டை சுண்டை
தஞ்சமாஞ் சிறு பயறு
தவிமுளைக் கீரைத் தண்டு
நஞ்சில்லாச் சில்லாச் சிறுக்கீரை
நவிலுவோம் நெல்லிக் காயும்
கொஞ்சிய முசுட்டைக் கீரை
நாமத குணம தாமே

வாழைக்கச்சல், துவரை, பிரண்டை, சுண்டை, சிறுபயிறு, முளைக்கீரைதண்டு, புல் பூண்டுகள், இல்லாத சிறுகீரை, நெல்லிக்காய், முசுட்டைக்கீரை இவற்றை உணவுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

142\. குறைதாம் பால்நெய் மோரு
குமமயி லுடும்பு காடை
நிறைமதா மாமை தாரா
விராலோடு நிகழ்த்தக் கேகு
லுணவதா மாடு கோழி
முட்டை வெள்ளையு மாகும்
வுணவதாம் யரை தெளி
விராலோடு வுகுவை காணே

பால், நெய், மோர், மயில், உடும்பு, காடை, ஆமை, தாரா, விரால், மாடு, கோழிமுட்டை, வெள்கரு போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். விரால் மீனோடு உகுவையையும் சேர்த்துக் கொள்ளலாம்.

143\. உகுவையுஞ் சுறாத் திரட்டி
நெத்திலி யுளுதி யாகும்
பகுதில்லா திவைய னைவ்வாம்
பகர்த்திட்டோம் பொதுவாய்பாரு
யெழுதிய நோய்கள் கண்டு
யெடுத்திடு யின்ன தென்டு
கொழுகிய நோய்கள் கெத்த
கருதியெவ் கூட்டிக் கொள்ளே

உகுவை, சுறா, நெத்திலி இவற்றையெல்லாம் நீக்கி விடுவது சிறந்தது. அந்தந்த நோய்களுக்குத் தக்கவாறு மருந்துண்ணும் காலத்தில் உண்ணத் தகுந்த பொருட்களும், உண்ணக்கூடாத பொருட்களும் மாறும். எனவே அவ்வவ் நோய்க்-கேற்ப பத்தியப் பொருட்களும் மாறுவதை அறிந்து நீக்குவன நீக்கி சேர்ப்பன சேர்க்க வேண்டும்.

144. கொல்வது லோக பற்பங்
கூறிய வகை வகைக்குப்
பல்வது யிடைக்குக் கெந்தி
யிதிலிடு கழஞ்சி வீத
மல்வது குமரிச் சாத்தில்
தாளரைத் தண்டை செய்து

உலோக பற்பங்கள் செய்வதற்கான முறையினை நான் சொல்வேன். உலோகத்தின் எடைக்கு எடை கெந்தி சேர்த்து கற்றாழைச் சாற்றில் அரைத்து உருண்டை செய்து கொள்ளவும்.

ஓ